DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

PROSECUTION WITNESS

STC No. 528/2024 Crime No. - Station -

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-2- அருண் | Village | |
| Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 24.06.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் சேர்வராயன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, தனியார் மில்லில் வேலை செய்து வருகிறேன். 01.01. 2024 ஆம் தேதியன்று காலை சுமார் 05:30 மணியளவில், நான் சரவணா டையிங் கம்பெனி அருகில் உள்ள டீக்கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தேன். அப்போது இந்த விபத்தில் காயம்பட்ட ராஜா என்பவர் பவானி-ஆப்பக்கூடல் ரோட்டில் இடது ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டது. விபத்தை நேரில் பார்த்த நான் அருகில் சென்று பார்த்தபோது அவருக்கு இடது கை, கால் ஆகி இடங்களில் அடிபட்டிருந்தது. பின்னர் அருகில் இருந்தவர்களின் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்து ஆம்புலன்ஸ் வந்தவுடன் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். நான் விபத்து ஏற்பட்டவுடன் விபத்து நடந்த பதட்டத்திலும், அடிபட்டவரை காப்பாற்றும் முனைப்பிலும் இருந்ததால் மேற்படி பைக்கை ஓட்டி வந்த நபரை நான் சரியாக அடையாளம் பார்க்கவில்லை. விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவயிடம் பேருந்து நிறுத்தம் என்றால், சரிதான், பொதுவாக பேருந்து நிறுத்தம் அருகே அனைத்து வாகனங்களும் மெதுவாகத்தான் செல்லும் என்றால், சரிதான். விபத்தில் அடிபட்ட நபர் ரோட்டை கடந்துதான் வேலைக்கு செல்ல வேண்டும் என்றால், சரிதான். விபத்தானது ரோட்டை கடக்கும்போது தான் நடைபெற்றது என்றால், சரிதான். நான் சத்தம் கேட்டுத்தான் சம்பவத்தை பார்த்தேன் என்றால், சரிதான்.

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.06.24 06:03:05 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.